முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு. E. மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.
2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் நாள், வெள்ளிக்கிழமை
EA.No.4/2025
இன்
EP.No.9/2021
இன்
O.S No.79/2014
-----

1) மீனாட்சிசுந்தரம்
2) கணபதி முருகன்

... மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/ எதிர்/

விநாயகமூர்த்தி (இறப்பு) ... 2ம் மனுதாரர்/2ம் வாதி

1) கனகசுந்தரம் ... 1ம் எதிர்மனுதாரர்/1ம் மனுதாரர்/1ம் வாதி
2) இந்திராணி ... 2ம் எதிர்மனுதாரர்/3ம் மனுதாரர்

இம்மனுவானது 06.11.2025ம் தேதி என் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆஜராகியும் இருந்த வழக்கில், மனு மற்றும் எதிருரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>உத்தரவு</u>

இம்மனுவானது திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள OS No.36/2018 மற்றும் AS No. 38/2021 ல் IA No.67/2021 இறுதி தீர்ப்பு வரும் வரை சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள E.P No.9/2021ல் நிறைவேறுதல் நடவடிக்கையை நிறுத்தி வைக்க இடைக்கால (Stay) உத்தரவு வழங்க வேண்டி கட்டளை 21 விதி 29ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுவின் சுருக்கம்</u> :**

2.1) மேற்படி, அசல் வழக்கான OS No.79/2014ல் கீழமை நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு சாதகமாக 23.12.2020 அன்று தீர்ப்பாகி, மேற்படி தீர்ப்பில் தாவா சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதிகள் 23.12.2020ம் தேதியிலிருந்து 2 மாத காலத்திற்குள் வாதிகள் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவாகியிருக்கிறது என்றும், மேற்படி தீர்ப்பின் பேரில் மனுதாரர்கள் திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து AS No.38/2021 என்று நிலுவையில் இருந்து வருகிறது என்றும், எனவே, சமூக நீதிமன்றத்தின் தீர்ப்பின் பேரில் நிறைவேறுதல் மனுவின் நடவடிக்கையை திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள AS No.38/2021ல் இறுதி தீர்ப்பு வரும் வரை சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள E.P No.9/2021ல் நிறைவேறுதல் நடவடிக்கையை நிறுத்தி வைக்க இடைக்கால (Stay) உத்தரவு வழங்க வேண்டி இந்த மனு மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில், நிறைவேற்றல் மனு விசாரணையே நிறுத்தி வைக்க கேட்டிருக்கும்

பரிகாரங்கள் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், இம்மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.3) மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>தீர்மானிக்க வேண்டிய விசயம்</u>** :

3. இந்த மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u> :**

4. இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவென்றால், திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள OS No.36/2018 மற்றும் AS No.38/2021ல் இறுதி தீர்ப்பு வரும் வரை சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள E.P No.9/2021ல் நிறைவேறுதல் நடவடிக்கையை நிறுத்தி வைக்க இடைக்கால (Stay) உத்தரவு வழங்க வேண்டுமா என்பதே ஆகும்.

5. மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/வாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர், இந்த வழக்கு 2020 ஆம் ஆண்டில் தீர்ப்பளிக்கப்பட்டது என்றும், நிறைவேற்றுதல் மனு 2021 ஆம் ஆண்டிலேயே தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்றும், இந்த மனு, நிறைவேற்றுதல் மனுவின்

நடவடிக்கைகளில் மேலும் தாமதத்தை ஏற்படுத்தும் வகையில் இப்போது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறும் கோரினார்.

6. இந்நிலையில், கீழ்க்கண்ட மாண்புமை உச்சநீதிமன்ற முன்தீர்ப்பான,

**Shaukat Hussain Alias Ali Akram & Ors**

**vs**

**Smt. Bhuneshwari Devi (Dead))**

**25 August, 1972**

... என்ற முன்தீர்ப்பு வழக்கின் பத்தி 5ல்,

> And then we have rule 29 which deals with a different situation. The rule is as follows :
>
> " Where a suit is pending in any court against the holder of a decree of such court, on the part of the person against whom the decree was passed, the court may, on such terms as to security or otherwise, as it thinks fit, stay execution of the decree until the pending suit has been decided."
>
> It is obvious from a mere perusal of the rule that there should be simultaneously two proceedings in one court. One is the proceeding in execution at the instance of the decree-holder against the judgment-debtor and the other a suit at the, instance of the judgment-debtor against the decree-holder. That is a

> condition under which the court in which the suit is pending may stay the execution before it. If that was the only condition,
>
> ...... என்று கூறப்பட்டுள்ளது.

... மேலும் முன்தீர்ப்பு வழக்கின் கடைசி பத்தியில்,

> Since in the present case the decree sought to be executed by the court of Munsif Gaya was not the decree of that court but the decree of the Subordinate Judge, Gaya exercising Small Cause Court jurisdiction, the court of the Munsif had no competence under Order 21 rule 29 to stay the execution of the decree.
>
> ...... என்று கூறப்பட்டுள்ளது.

7. இந்த சூழ்நிலையில், ஆணை 21 விதி 29 இன் படி, ஒரு நிறைவேறுதல் மனு நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டுமாயின் நிறைவேறுதல் மனுவில் கண்ட தரப்பினர்களை பொறுத்து அதே நீதிமன்றத்தில் வேறு ஒரு வழக்கு நிலுவையில் இருக்கும் நிலையில் மட்டுமே தடை விதிக்க முடியும் என்றும் மேற்படி முன்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

8. இந்நிலையில், OS No.79/2014 இல் 23.12.2020ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், அசல் நிறைவேற்று மனு தாக்கல் செய்து 4 ஆண்டுகள் நிலுவையில் இருக்கிறது. மேலும், மேற்படி OS No.36/2018 மற்றும் AS No.38/2021 வழக்கானது திருமங்கலம், சார்பு

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்காக உள்ள நிலையிலும், இந்நீதிமன்றத்தில் மேற்படி தரப்பினர்களை பொறுத்து எந்த ஒரு வழக்கும் நிலுவையில் இல்லாத நிலையிலும், இம்மனு ஆணை 21 விதி 29 இன் படி சரியான சட்ட வரையறைக்குட்பட்டு தாக்கல் செய்யப்படாத நிலையிலும், மேற்படி மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பில் கூறப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படியும், ஆணை 21 விதி 29 இன் படி, அசல் வழக்கில் வழங்கிய தீர்ப்பாணையை நிறைவேற்றுவதை சரியான காரணமின்றி இந்நீதிமன்றம் நிறுத்தி வைக்க முடியாது என்பதை கருத்தில் கொண்டு, இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 14.11.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.14 16:22:11 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (FAC)
திருமங்கலம்.

**இணைப்பு** :

1. **மனுதாரர் தரப்பு சாட்சி** : இல்லை

2. **<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** :

ம.சா.ஆ.1– OS No.36/2018 வழக்குரை நகல்.
ம.சா.ஆ.2– AS No. 38/2021 வழக்குரை நகல்.
ம.சா.ஆ.3– OS No.36/2018 எதிர் வழக்குரை நகல்.

3. **<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி</u>** : இல்லை

4. **<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.14 16:22:20 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

E.A.No. 4/2025
in
E.P.No. 9/2021
in
OS.No.79/2014
Order
D.D. 14.11.2025